ந. ரங்கசாமி
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு

सत्यमेव जयते

பாண்டிச்சேரி

தேதி: 3.2.2012

## மிலாது நபி வாழ்த்துச் செய்தி

**'அன்பின் வழியது வாழ்வு'** என்கிற இறைவாக்கின் அடிப்படையில் அன்பின் வழியே மக்களை வாழ்விக்க வந்த உத்தமர், இறைநபி அவர்கள் அவதரித்த திருநாளை இசுலாமிய சகோதர, சகோதரிகள் **'மிலாது நபி'** நன்னாளாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர்.

**"எவனொருவன் பிறிதொருவனுக்கு வாழ்வளிக்கின்றானோ அவன் எல்லா மனிதர்களுக்கும் வாழ்வு அளித்தவன் போல் ஆவான்"** என்கிற திருக்குர்ஆனின் வரிகளைத் தமது வாழ்வின் மூலம் மெய்ப்பித்தவர் முகம்மது நபி அவர்கள். மனிதனுக்கு மனிதன் சகோதரன் என்ற உண்மையை உலகத்திற்கு எடுத்துரைத்த அண்ணல் முகமது நபி அவர்கள், உலகில் அமைதியும், சமாதானமும் இன்றியமையாத தேவைகள் என போதித்தவர்.

அவர் தமது வாழ்நாளில் பொய் பேசியதில்லை; வாக்குறுதிகளில் இருந்து மாறியது இல்லை; தனக்குத் துன்பம் இழைத்தவர்களைப் பழிவாங்கியதும் இல்லை; அவர் எப்பொழுதும் ஏழைகளுக்காக இரக்கப்பட்டார்; அனாதைகளுக்கு ஆதரவு தந்தார்; துன்பத்தில் சிக்கிக் கொண்டவர்களின் துயர்களைத் துடைத்தார்; விதவைப் பெண்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்.

இவற்றின் காரணமாகவே நபிகளிடம் அன்பு பாராட்டிய மக்கள் அவரை நம்பிக்கைக்குரியவர், அடைக்கலம் அளிப்பவர், வாய்மையாளர் எனப் பொருள்படும், **"அல் அமீன்"** எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைத்தனர்.

நபிகள் நாயகம் பிறந்த இந்த நன்னாளில் தீமைகள் முற்றிலுமாக அழிந்து, அன்பினாலும் கருணையினாலும் நன்மைகளாலும் இந்த உலகம் நிரம்ப, நபிகளின் பொன்மொழிகளை நாம் நினைவில் நிறுத்திச் செயல்பட வேண்டும் என்று கூறி, அனைவருக்கும் எனது உளங்கனிந்த மிலாது நபி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ந. ரங்கசாமி)

✆ அலு.: 2333399, 2335530, 2335328, 2335522 தொலைநகலி: 0413-2333135 இல்லம்: 2271232